என்ற கோரிக்கையை வைத்துக் கொண்டேயிருக்கின்றனர். அதற்கு எல்லையே இல்லாமல் போய்விடும், ஆகவே தான் அரசு இப்போது அதைப்பற்றி மறுபரிசிலனை செய்வதற்கு இயலாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143. டாக்டர் க. கோபால். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

143—

நன்னிலம் தொகுதியில் கல்லூரி.

*3278 டாக்டர் க. கோபால் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தொகுதியில் உயர் கல்வி நிலையங்கள்—தொழிற் கல்லூரியோ அல்லது கலைக் கல்லூரியோ—இல்லையாதலால் உடன் ஏதேனும் ஒரு கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது,

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதி பெரும்பாலும் ஏழை நடுத்தர விவசாயிகள் வாழ்கின்ற தொகுதியாகும், அவர்கள் தங்கள் குழந்தைகளை கல்லூரிக்கு அனுப்புவது என்றால், நன்னிலம் தொகுதியில் இருந்து கும்பகோணத்திற்கோ அல்லது மன்னமங்கலத்திற்கோ அனுப்புகிற சூழ்நிலையில் உள்ளனர். அப்படியே கல்லூரிக்கு அனுப்புவதாக இருந்தாலும், அவர்கள் தினந்தோறும் கல்லூரிக்குச் செல்வதற்கும் விடுதியில் தங்குவதற்கும் மிகவும் சிரமமான சூழ்நிலையில் உள்ளனர். எனவே, இந்தக் கல்வி ஆண்டில் இல்லை என்றாலும் வருகிற நிதியாண்டிலாவது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்குத் தொகுதி கல்லூரிகள் ஆரம்பிக்கிற திட்டம் இப்போது அரசிடம் இல்லை, இரண்டாவது ஒரு இடத்திலே நாம் கல்லூரிகளை அமைத்தால், அது அந்த இடத்திலே இருக்கின்றவர்களுக்கு வேண்டுமானால் சௌகரியமாக இருக்கலாமே தவிர, தொகுதியில் இருக்கிற மற்றவர்கள் போய்த்தான்

படித்துத்திர வேண்டும். ஆகவே, தொகுதிக்குள்ளே ஒரு இடத்திலே போய் படிக்கின்றவர்கள், பக்கத்திலே இருக்கிற கல்லூரியிலே சேர்ந்து படிக்கலாம். போதுமான அளவிற்கு கல்லூரிகள் இருக்கின்றன: கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த நிலையில் இப்போது புதிதாக கல்லூரியை நன்னிலம் தொகுதியில் ஆரம்பிக்கிற திட்டம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 144, திரு. வ. மு. சுப்பிரமணியம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

144—

மணலூர் காகித மற்றும் இராசாயன ஆலைகளின் கழிவுகள்.

*1388 திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) பசும்பொன் முத்துராமலிங்கதேவர் மாவட்டம், மணலூரில் உள்ள காகித மற்றும் இரசாயன ஆலைகளின் கழிவுகள் முறையாக வெளியேற்றப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நிறுவனத்தார்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததைப் போல, இந்த இரசாயன மற்றும் காகித ஆலைகள், இரசாயனக் கருவிகளை அமைத்து, இரசாயனத் தன்மைகளைக் குறைப்பதற்கு எந்த ஒரு சுத்திகரிப்பு நடவடிக்கைகளும் செய்யப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு, இந்த ஆலைகள் வைகை ஆற்றுப் படுகையிலே அமைந்துள்ளன. ஜனத்தொகை அதிகமாக உள்ள குடியிருப்புகள், இந்த ஆலையைச் சுற்றிலும் இருக்கின்றன. இதனால், தண்ணீர் கெட்டு, சுற்றுப்புறச் சூழ்நிலைகள் எல்லாம் மாசுபட்டு, சில கிராமங்களிலே இருக்கிற ஜனங்கள் அந்த இடத்தை